# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No. 78/2013 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | பி.வா.சா-01 (DW-01 ) |
| பெயர் | :- | முருகன் |
| தேதி | :- | 26-06-2025 |

**சான்றாளர் மீண்டும் அழைக்கப்பட்டார். சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை :-**

1 ஆம் பிரதிவாதி மாரிமுத்து என் தகப்பனார் என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதி மோகன்ராஜ் எனக்கு அண்ணன் என்றால் சரிதான். 5 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் வழக்குச் சொத்தின் சில பகுதிகளை கிரயம் வாங்கியவர்கள் என்றால் சரிதான். வாதிகள் நால்வரும் என் தகப்பனாருடன் பிறந்த என் தகப்பனாரின் சகோதரிகள் என்றால் சரிதான். என் தகப்பனார் மூத்தவர் என்றால் சரிதான். வாதிகளுக்கும் என் தகப்பனாருக்கும் தகப்பனார் எல்லப்ப முதலியார் என்றால் சரிதான்.

வழக்குச் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தந்தைவழி பாட்டனாரான எல்லப்ப முதலியாருக்கு சொத்தமானது. பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை பத்திரம்மூலம் சொந்தமானது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் தரப்பினர்கள் யார்யார் என்றால் என் தாத்தாவின் அண்ணன் சுப்ரமணி, என் தாத்தாவின் தம்பி அர்த்தனாரி, என் தாத்தா எல்லப்பன், என் தாத்தாவின் தங்கை ஆரிமுத்து ஆகியோர்

தரப்பினர்கள். அதற்குமுன் அந்த சொத்து யாரிடம் இருந்தது என்றால் என் தாத்தா எல்லப்பனின் அப்பா மாரிமுத்துவின் அனுபோகத்தில் இருந்தது. மாரிமுத்து இறக்கும்வரை அவர்தான் அனுபோகத்தில் இருந்தார் என்றால் சரிதான். மாரிமுத்து எப்போது இறந்தார் என்றால் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் இறந்திருப்பார். அவர் இறந்த பிறகுதான் மேற்சொன்ன பாகப் பிரிவினை நடந்தது என்றால் சரிதான். முப்பாட்டனார் மாரிமுத்து பெயரில் பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான்.

பாகப்பிரிவினை நடந்தபின் எல்லப்பன் பெயரில் அவருக்கு ஒதுங்கிய சொத்துக்கள்மீது வருவாய்துறை ஆவணங்களில் பதிவு ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. பட்டா எண்.1559. அதை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். எல்லப்பன் இறந்தபிறகு என் தகப்பனாரும் வாதிகளும் கூட்டாக வழக்குச் சொத்தை அனுபோகம் செய்தனர் என்றால் சரியல்ல. எல்லப்பன் இறப்பதற்கு முன்பும் வாதிகளும் என் தகப்பனாரும் வழக்குச் சொத்தில் கூட்டுசுவாதீனத்தில் இருந்தனர் என்றால் இல்லை. வாதிகளுக்கு திருமணமாகி அவரவர் கணவர் வீட்டில் இருந்தனர்.

வழக்குச் சொத்தின் பரப்பளவு எவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியும். 1.50 ஏக்கர். வாதிகள் வழக்குச் சொத்து அவர்களின் தகப்பனார் சொத்து என்றும் அதனால் அதில் பாகம் வேண்டும் என்றும் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்கள்மீது தங்களுக்கு உரிமை வேண்டாம் என்று வாதிகள் விடுதலை பத்திரம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்து வழிவழியாக வந்த பூர்வீக சொத்து என்றும் அதில் வாதிகளுக்கு பாகம் உண்டு என்றும் சொன்னால் சரியல்ல.

என் தாத்தா இறந்த பிறகுதான் 4ஆம் வாதி வளர்மதிக்கு திருமணம் ஆனது என்றால் சரிதான். என் தகப்பனார் திருமணம் செய்துவைத்தார். நான் பொய் சொல்கிறேன் என்றும் 1 முதல் 3 வரையிலான வாதிகள்தான் திருமணம் செய்துவைத்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை வாதிகள் தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க நிறுத்தி வைக்கப்படுகிறது.**

**Sd/—V. Pugazhenthi,**

**Additional District&Session Judge,**

**Salem.**